'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XV **ஆகஸ்டு கி.பி. 2024** சான்று : 176



# வட்டாரத் தியானக் கூட்டங்கள்


கமுதி


ஆவுடைப் பொய்கை


சாயல்குடி


மானாமதுரை


R.S. மங்கலம்


புலியால்


சருகணி

# உங்கள் சகோதரனிடமிருந்து

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

இயேசு சீடர்களை அணுகி விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத் 28:18,19) என்று கூறினார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளை இது. நானும் நீங்களும் அவரது கட்டளைக்கு கீழ்படிய வாழ்த்துகிறேன். செபிக்கிறேன்.

இந்த இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய சூழல்களை உற்று நோக்கும் போது, மனம் திறந்து, மனவேதனையோடு உங்கள் அனைவரிடமும் பகிர்வது என்னவென்றால், நாம் பெரும்பான்மையாக உருவாவது, உருவாக்குவது சீடர்களை அல்ல பக்தர்களையே. நம்மில் பெரும்பாலானவர்கள் பக்தர்களாகவே வாழ்கிறோம் என்பது எந்த விதமான ஐயத்திற்கும் இடமில்லை. மீண்டும் மீண்டும் பல்வேறு தியானங்கள், செய்திகள், எழுத்துக்க, மூலம் எவ்வளவு விளக்கம் தந்தாலும், பக்தி நிலையிலேயே தொடர்கிறோம் என்பது கசப்பான உண்மை. கடவுளுக்குத் தேவை பக்த கோடிகள் அல்ல, சீடர்கள் என்று ஒரு இறையியலார் ஆணித்தரமாக கூறியிருக்கிறார். நாமும் பல ஆண்டுகளாக இக்கருத்தை கூறியும் எழுதியும் வந்திருக்கிறோம். தனக்கு நல்ல உடல் நலம் பெற, தன் குடும்பம் செழிக்க, தன் கடன் பிரச்சனை தீர, நோய்கள் பிணிகள் தீர, தொழிலில் வணிகத்தில் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய, வீடு கட்ட, வேலை வாய்ப்புகள் கிடைக்க, குடும்ப பிரச்சனைகள் மற்ற பிரச்சனைகள் தீர, பிள்ளை வரம் கிடைக்க, பிள்ளைகள் படிப்பில் உயர, திருமணமாக, ஏதாவது, ஏதாவது..... கிடைக்கும் என்ற பலதரப்பட்ட தேவைகள் நிறைவேற கடவுளை தேடி வருபவனும், தனக்காக கடவுளை பயன்படுத்துபவனும் பக்தனாவான். மேலே எழுதப்பட்டுள்ள காரியங்களை கவனமாக வாசித்துப் பார்த்தால் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று தெளிவாகத் தெரியும்.

ஆனால் சீடர் கடவுளுக்காகத் தன்னை விட்டுக் கொடுப்பவன். பக்தனுக்கு கடவுளோடு தனிப்பட்ட உறவு இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் கடவுளோடு உறவில்லாமல், ஒன்றிப்பில்லாமல், இணைந்து இருக்காமல் யாரும் சீடராய் இருக்க முடியாது. அவரோடு நெருங்கிய உறவில்லாமல் நிச்சயமாக சீடராக இருக்க முடியாது. பக்தர் தனக்கு சொந்தமானவர். ஆனால் சீடர், தனது விலை மதிக்க முடியாத திரு இரத்தத்தை சிலுவையில் சிந்தி அவரை மீட்டுக் கொண்ட கடவுளுக்குச் சொந்தமானவர். பக்தரின் இலக்கு சுயநலம், சுய முன்னேற்றம். ஆனால் சீடரின் இலக்கு குருவைப் போல் மாறுவது (லூக்6:40). சீடர் தம் குருவைப் போல் ஆகட்டும். பணியாளர் தம் தலைவரைப் போல் ஆகட்டும் (மத்10:25) என்ற இயேசு ஆண்டவரின் கட்டளையை சிரமேற்கொண்டு கடைபிடிப்பது. இனி வாழ்வது நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா 2:20) என்ற இலக்கை அடைவது. நான் கிறிஸ்துவைப் போல நடப்பது போன்று நீங்களும் என்னைப்போல் நடங்கள் (1கொரி 11:1) என்று உலக மக்களிடம் அறைகூவல் விடுவது. கிறிஸ்துவிடம் விளங்கிய அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் (கலா 5:22,23) போன்ற குண நலன்களைப் பெற்றவராக மாற்றம் பெறுபவரே சீடர். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் விளங்கிய விலை மதிக்க முடியாத உயர்ந்த, உன்னத, சுயநலமற்ற, அன்பு கொண்டவர்களாக மாறுபவனே உண்மைச் சீடர். இப்போது சொல்லுங்கள், நாம் பக்தர்களா? சீடர்களா?.

உண்மையான சீடருக்குரிய அடையாளங்களை திருவிவிலியம் நம் முன் வைக்கிறது. அவற்றைத் தொடர்ந்து தியானிப்போம். அவரது உண்மைச் சீடராக தொடர் முயற்சிகளை எடுத்துக் கொள்வோம். உண்மைச் சீடர்களை உருவாக்குவோம். புனித பவுலடியார் சீடர்களை உருவாக்குவதில் மிக அதிக அளவில் பங்காற்றியவர். யார் உண்மையான சீடர் என்பதை புரிந்து கொள்வதுஅல்லது புரிந்து கொண்டதை புதுப்பிப்பது, ஆழப்படுத்துவது இந்த செய்தியின் நோக்கமாகும்.

**சீடன் கற்றுக் கொள்பவன்.**

'நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல்

ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்(மத்11:29) என்று இயேசு ஆண்டவர் கூறியிருக்கிறார். அவரே இறை மகனாய் இருந்தும் துன்பங்களின் வழியே கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டார் (எபி 5:8) என்றால் நாமெல்லாம் எம்மாத்திரம்?. ஒரு உண்மை சீடர் இயேசு கிறிஸ்து ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். பேதுருவும் யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதைத் தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால் அவர்களது துணிவைக் கண்டு வியப்படைந்தனர் (திப 4:13). அப்படிப்பட்ட பேதுருவும் யோவானும் எழுதிய நற்செய்தி, திருமுகங்கள் நாம் அறிந்ததே. அதற்கு முக்கிய காரணம் என்னவெனில் அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதை உணர்ந்து கொண்டதே ஆகும் (திப4:13). அவர்கள் இயேசுவோடு ஒன்றித்திருந்து, அவரது பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொண்டிருந்தனர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பேதுரு தன் திருமுகத்தில் கடவுளை அறிவதன் வாயிலாகத்தான் நமக்கு அருளும், நலமும் பெருகும், நமக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கிறோம் (2பேதுரு 1:2,3) என்றும், உலகின் அழிவுச் சக்திகளில் இருந்து தப்ப முடியும் என்றும் (2பேதுரு 2:20) கல்வி அறிவில்லாதவர், கடவுளை அறிந்து எழுதி இருக்கிறார். தன்னுடைய திருமுகத்தை முடிக்கும் போது அவருடைய அருளிலும், அறிவிலும் வளர்ச்சி அடையுங்கள் (2பேதுரு 3:18) என்று முடிக்கிறார்.

கல்வி அறிவில்லாத யோவான் எழுதிய நற்செய்தியை சரியாக புரிந்துகொள்ள நாம் விண்ணகம் சென்று அவரிடமே கேட்டு அறிந்து கொண்டால் மட்டுமே தெளிவாகப் புரியும் என்று சொல்வார்கள். அவர் ஒரு நற்செய்தி, மூன்று திருமுகங்கள் மற்றும் திருவெளிப்பாடு என்று ஐந்து புத்தகங்கள் எழுதியிருக்கிறார். கல்வி அறிவற்றவர் எப்படி இத்தனை புத்தகங்களை எழுத முடிந்தது? புரிந்துகொள்ள கடினமான பகுதிகளை எழுத முடிந்தது? என்ன காரணம்? அவர் உண்மை சீடராக இருந்து, இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்து, மார்பில் சாய்ந்து, அவருடன் ஒன்றித்திருந்து கற்றுக் கொண்டார். தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம், கண்ணால் கண்டோம், உற்று நோக்கினோம், கையால் தொற்று உணர்ந்தோம்(1யோவா 1:1) என்கிறார். மேலே உள்ள இறை வார்த்தையை வாசிக்கும் போது எவ்வளவாக திருத்தூதர்கள் இயேசுவை ரசித்து, ருசித்து, அனுபவித்து இருக்கிறார்கள். அவரிடம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலை வாழ்வு (யோவா17:3) என்று இயேசு ஆண்டவர் கூறியிருக்கிறார்.

நாம் திரு விவிலியத்தோடு பல மணி நேரம் செலவழிக்கும் போது இயேசுவோடு ஒன்றித்திருக்கிறோம். அவரை அறிந்து கொள்ளும் அறிவிலே வளர்கிறோம். ஒரு உண்மை சீடனுக்கு திரு விவிலியமே அடிப்படை. உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணருமாறு என் கண்களை திறந்தருளும் (தீபா 119:18) என்று செபிக்க வேண்டும். அவரை அறிகிற அறிவிலே வளர, முழுமையாக அறிந்து கொள்ள, தூய ஆவியானவரால் நிரப்பப்பட நம் அகக் கண்கள் திறக்கப்பட (எபே 1:17-19) நாம் உருக்கமாக செபிக்க வேண்டும். நீங்கள் அனைத்திலும் ஆண்டவருக்கு உகந்தவற்றை செய்து அவருக்கு ஏற்புடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பயன் தரும் நற்செயல்கள் அனைத்தையும் செய்து கடவுளைப் பற்றிய அறிவில் வளர வேண்டும் என்ற புனித பவுலடியாரின் (கொலோ 1:10) அறிவுரையை நானும் நீங்களும் பின்பற்றி வாழ செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரர்

நற்பணி **அ. சகாயராஜா**

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்;<br>படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி<br>அமைதியாயிருங்கள். | **திருப்பாடல் 4:4** |
|---|---|

- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 07.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8 பேரும் இரண்டாவது குழுவில் 8 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி S.இராஜேந்திரன், நற்பணி K. ஜஸ்டீன் கபிரியேல், நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. அடைக்கலம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 07.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 9 பேரும் இரண்டாவது குழுவில் 8 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி V. செங்கோல் மேரி, நற்பணி M. லூயிஸ் ஜான்போஸ்கோ, நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 13.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 17 பேரும் இரண்டாவது குழுவில் 6 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS ராணி, நற்பணி X. லூர்துமேரி, நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி J. ரபேக்கா ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 14.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 3 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி .S. ஆரோக்கியசாமி, நற்பணி G. ஜெனிபர், நற்பணி பெ. தெரசா மிரண்டா, நற்பணி S. வில்லியம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -V ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 14.07.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. சகாய தமிழ்செல்வி, நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -VI சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 14.07.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. சகாயமேரி, நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி G. மிக்கேல் பிரபாகர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VII அமைதியகம், காயாவயலில் 21.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8 பேரும் இரண்டாவது குழுவில் 15 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr.பச்சைஜோதி, நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி, நற்பணி A. சகாயராஜா, நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -VIII குருமிளாங்குடி, புனித அன்னாள் ஆலயத்தில் 21.07.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை, நற்பணி S. சேசுராஜா, நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி IX சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 21.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8 பேரும் இரண்டாவது குழுவில் 13 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை

நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி A. சந்திரபுஷ்பா, நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி T . ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி X இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில்28.07.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 7 பேரும் இரண்டாவது குழுவில் 13 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A.தனிநாயகம், நற்பணி S. தைனஸ்மேரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி A. ஜான்சி மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - XI கமுதி, புனித அந்தோணியார் ஆலயத்தில் 28.07.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி M. லூயிஸ் ஜான் போஸ்கோ, நற்பணி T. மிக்கேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## ஜூலை 2024 கடந்த மாதச் செயல்பாடுகள்

• 03.7. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 30 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி P. அந்தோனி அருள் வளாவன், நற்பணி ஜெபமாலை ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• 03.7.2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 72 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி S.சந்தியாகு, நற்பணி S.சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

• 05.7.2024 அன்று மகிண்டி மிக்கேல்பட்டிணம் புனித மிக்கேல் அதிதூதர் கோவிலில் முழுஇரவு செப் வழிபாடு நடைபெற்றது. நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி சகாயமேரி வழிநடத்தினார்கள்.

• 06.7.2024 அன்று இடைக்காட்டூர் இயேசுவின் திரு இருதய ஆலயத்தில் பரிந்துரை செபம் நடைபெற்றது. இதில் பரமக்குடி வட்டாரத்தை சார்ந்த நற்பணி R. சேவியர் ஸ்டெல்லாமேரி, நற்பணி A.ஆரோக்கியமேரி, நற்பணி S.ஆரோக்கியமேரி, நற்பணி M.அருள் சீலாமேரி, நற்பணி A.லில்லி, நற்பணி T. ஆரோக்கிய தமிழரசி ஆகியோர் பங்கேற்று செபித்தார்கள்.

• 14.7. 2024 அன்று சாயல்குடி பங்கு கீழமுந்தல் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் நற்பணி C.சகாய எஸ்கலின் லதா, நற்பணி P. வெர்ஜீனியா, நற்பணி I. ரொசாரியோ, நற்பணி A.ஆண்ட்ரோ, நற்பணி P. மார்க்கஸ் ஆகியோர் பணியாற்றினார்கள்.

• 25.7.2024 அன்று அஞ்சுக்கோட்டை பங்கு சின்ன அஞ்சுக்கோட்டைகிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் நற்பணி P.அந்தோணி அருள் வளன் நற்பணி G. டேவிட் அந்தோணி களப்பணி ஆற்றினார்கள்.

• 25.7.2024 அன்று இருதயபுரம் பங்கு பெரியார் நகர் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் நற்பணி S இராஜேந்திரன், நற்பணி S.ஆரோக்கியசாமி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி சகாயமேரி ஆகியோர் பணியாற்றினார்கள்.

• ஜுலை 19,20 & 21 ஆகிய நாட்களில் முதல் குழுவினருக்கான ஆண்டுத் தியானம் -2024 பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. அருள்பணி குமார் ராஜா அவர்கள் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். அருள்பணி L. அமல்ராஜ் ஆன்மீக ஆலோசகர், தியான நாட்களில் உடன் பயணித்தார்கள். இத்தியானத்தில் 104 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**புளியால் வட்டாரம்**

புளியால் வட்டாரத் தியானக் கூட்டம், 7.7.2024 அன்று மணப்புஞ்சை புனித செபஸ்தியார் கோவிலில், காலை 10.30 மணிக்கு புகழ்ச்சி, பாவமன்னிப்பு வழிபாட்டோடு ஆரம்பமானது. தொடர்பாளராக நற்பணி M.மரியகிரகோரி அவர்கள் கலந்து கொண்டு, நற்செய்தி பணியாளராகிய நான் பயனில்லாததை நீக்கி, பயனுள்ளதை பேசுகிறேனா? என்ற தலைப்பில் இறைச்செய்தியை வழங்கினார்கள். மதிய உணவுக்கு பின், இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு பகிர்வு நடைபெற்றது. 19 பணியாளர்கள் கலந்து கொண்டனர். நன்றி செபம் கொள்கை பாடலுடன் 4.30 மணிக்கு நிறைவுற்றது.

L.**ஜான்போஸ்கோ**, வட்டார கண்காணிப்பாளர்.

**மானாமதுரை வட்டாரம்**

மானாமதுரை வட்டாரத் தியானக் கூட்டம், 14.07.2024 ஞாயிறு காலை 10.30 மணிக்கு இறைவழிபாட்டுடன் துவங்கியது. நெறியாளராக நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் நற்செய்தி பணியாளராகிய நான் பயனுள்ளதை பேசுகிறேனா? என்ற சிந்தனையில் செய்திகளை வழங்கினார். 27 பணியாளர்கள் கலந்து கொண்ட தியானம் நன்றி செபத்துடனும் கொள்கைப் பாடலுடனும் இனிதே நிறைவுற்றது.

நற்பணி I. **புஷ்பராஜ்**, வட்டார கண்காணிப்பாளர்

## ஆடுகளுக்கு வாயில் நானே

விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது (மத் 28:18)

நம் ஆண்டவர் விண்ணேற்றம் அடைவதற்குமுன் தம்முடைய சீடர்களை தம்மிடம் அழைத்து அதிகாரத்தைப் பற்றி பேசினார். ஒருமுறை அவர் தூய ஆவியானவரால் பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அலகை நம் ஆண்டவரிடம் உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப் பொழுதில் அவருக்குக் காண்பித்து இவற்றின் முழு அதிகாரமும் மேன்மையையும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினான் (லூக் 4:5-6). தொடக்கத்தில் தந்தையாம் கடவுள் தாம் படைத்த அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள். இவை அனைத்தையும் உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் என்று கூறி படைத்த அனைத்தையும் ஆளும் அதிகாரத்தை மனிதருக்குக் கொடுத்தார் (தொநூ 1:28). கடவுள் மனிதருக்காக செய்துள்ள இம்மாபெரும் செயலை தாவீது தன் உள்ளத்தில் வியப்போடு பார்க்கிறார். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படித்தியுள்ளீர் என்று கடவுள் மனிதருக்கு தந்துள்ள ஆளுமையையும் மேன்மையையும் நினைத்து மிகவும் வியப்போடு வர்ணிக்கிறார் (திபா 8:3-8). இவற்றை எபிரேயருக்கு எழுதிய திருமுக ஆசிரியர் கூறும்போது நீர் அவர்களை வானதூதரை விட சற்றே சிறியவராக்கியுள்ளீர். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கைபடைத்தவற்றுக்கு மேலாக அவர்களை நியமித்தீர் எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்படுத்தியுள்ளீர் அனைத்தையும் மனிதருக்கு அடிபணியச் செய்தார் என்பதால் எதையும் பணியாதிருக்க விட்டுவிடவில்லை எனலாம். எனினும் அனைத்தும் மனிதருக்கு அடிபணியக் காணோம் என்று வியப்போடு குறிப்பிடுகிறார் (எபி 2:6-8). இங்கே அனைத்தும் மனிதருக்குக் கீழ்படியக் காணோம் என்று ஏன் குறிப்பிடுகிறார்? கடவுள் அனைத்து அதிகாரங்களையும் மனிதனிடம் கொடுத்தபோது இவை அனைத்தையும் உங்கள் கட்டுபாட்டின்கீழ் கொண்டு

வாருங்கள் என்றார். கடவுளுக்கு கீழ்படிந்து அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய மனிதன் பொய்யான அலகையின் சூழ்ச்சியால் கடவுள் வழங்கிய அதிகாரத்தை இழந்தான். இதனால் மனிதன்மீது சாபம் வந்தது. பொன்னை விளைவித்த நிலம் இப்போது முற்புதரையும் முற்செடியையும் முளைப்பிற்கும் நிலமாக மாறிவிட்டது (தொ 27-3:18). இந்த அலகையைக் குறித்து ஏசாயா குறப்பிடுகையில் மக்களினங்களை வலிமை குன்றச் செய்தவனே என்று குறிப்பிடுகிறார் (எசா 14:12). இன்றைக்கும் பொய்யானவற்றை காண்பித்து மக்களை வலிமைக்குன்றச் செய்வது அலகையின் சூழ்ச்சியாக உள்ளது. ஆனால் நம் விண்ணகத் தந்தை நம்மீது அளவு கடந்த அன்பு கொண்டவர். மனிதன் வெறும் களிமண்தானே என்று நம்மீது பரிவு கொண்டு அவர் சாயலில் நாம் இருப்பதால் மீண்டும் அவரோடு நம்மை சேர்த்துக்கொள்ள திருவுளமானார். தன் ஒரே மகனை நமக்காக அனுப்பினார் (யோ 3:16). சாபத்துக்கு உள்ளான நம்மை கடவுளோடு ஒப்புரவாக்குவது என்பது சாதனை செயல் அல்ல. விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த கடவுள் நம்மீது விழுந்த சாபத்தை போக்குவதற்கு ஊனும் இரத்தமும் கொண்ட நம்மைப் போல ஆக வேண்டியிருந்தது. சாவின்மேல் அதிகாரம் கொண்டிருக்க அலகையைச் சாவின் வழியாகவே அழித்தார். வாழ்நாள் முழுவதும் சாவு பற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களை விடுவித்தார் (எபி 2:14-15).

அவராகவே நம்மைத் தேடி வந்து மீட்கத் திருவுளமானார். சிலுவையினால் கிடைத்த வெற்றியால் அலகையின் எல்லா அதிகாரங்களையும் படைக்கலன்களையும் கிறிஸ்து பிடுங்கிக் கொண்டு அலகையை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார் (கொலோ 2:14-15). தொடக்க முதல் மனுக்குலத்திற்கு எதிராக இருந்த எல்லா சாபக்கட்டுக்களையும் ஆண்டவர் வெளிப்படையாகவே ஊர்வலமாக இழுத்துச் சென்று அழித்துவிட்டார். எனவேதான் இதோ இவ்வுலகின தலைவன் வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு என் மேல் அதிகாரம் இல்லை என்று கூறினார் (யோ 14:30). அலகை இவ்வுலகிற்குதான் தலைவன் அவரது பிள்ளைகளாகிய நமக்கு அவன் தலைவன் அல்ல. அவனது அனைத்து அதிகாரத்தின் மீதும் ஆண்டவர் வெற்றி கொண்டு விட்டார். இப்போது அனைத்து அதிகாரமும் அவர் கையில் உள்ளது (யோ 17:2). அவர் விண்ணேற்றம் அடைவதற்கு முன் சீடர்கள் அனைவரையும் தம்மிடம் வரவழைத்து விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையம் சீடராக்குங்கள். உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன் என்றார் (மத் 28:16-20). சீடர்களும் தங்களோடு கூட இருந்த ஆண்டவரின் வார்த்தைக்கு முழுவதும் கீழ்படிந்தார்கள். சென்ற இடங்களிலெல்லாம் அலகையை எதிர்த்து நின்று நற்செய்தியை அறிவித்தார்கள். இன்றைக்கு நம்முடன் இருக்கின்ற ஆண்டவராம் தூய ஆவியானவரின் (2 கொரி 3:17) ஆலோசனைக்கு கீழ்படியாமல் அலகையின் ஏமாற்று வழிகளுக்குக் கீழ்படிவதால் அவன் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறான். எதுவும் நமக்குக் கீழ்படிய மறுக்கிறது. அலகையை எதிர்க்கும் அதிகாரத்தை ஆண்டவர் நம் நாவில் வைத்திருக்கிறார். புனித பவுலின் நம்பிக்கை அறிக்கையை கவனிப்போம். நாங்கள் உலகில்தான் வாழ்கிறோம். எனினும் எங்கள் போராட்டம் உலகைச் சார்ந்தது அல்ல. எங்கள் போராட்டத்தில் நாங்கள் பயன்படுத்தும் கருவிகள் உலகு சார்ந்தவை அல்ல.

மாறாக அவை கடவுளின் வல்லமையால் அரண்களைத் தகர்த்தெரியக் கூடியவை... மனித எண்ணங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் வருமாறு கட்டாயப் படுத்துகிறோம் என்று ஆண்டவர் நமக்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்தி அலகையின் செயல்களை முறியடிப்பது என்பதை மிகத் தெளிவாக விளக்குகிறார் (2 கொரி 10:3-5). எனவே ஒரு நொடி பொழுதில் உலக அரசுகள் அனைத்தையும் ஆண்டவரிடம் காட்டியது அலகை; ஆனால் அவை அனைத்தையும தம்முடைய வார்த்தையைக் கொண்டு அலகையை ஒன்றுமில்லாமல் ஆக்கினார் (லூக் 4:3-12). நாமும் அவரைப் போல அவரது வார்த்தைக்கு முழுவதும் கீழ்படிவோம். அலகையின் பொய் வழிகளை எதிர்த்து நிற்போம். சீடர்களுக்கு அதிகாரம் வழங்கிய அதே ஆண்டவர் இன்றைக்கும் அவரது அதிகாரமாக தூய ஆவியானவர் நம்மோடு இருப்பதை உணர்வோம். பணி வாழ்வில் உற்சாகமாய் செயல்படுவோம்.

நற்பணி **ஆ.விசுவாசம்,** செஞ்சை.

---

# இது சாத்தியமா ?

உடலோ, மனதோ வலுகுறைந்திருக்கும்போது, நாம் எப்படி மகிழ்ச்சியாய் இருக்க முடியும்? சாத்தியமில்லைதான்.

ஒரு நாள் இரவு, படுக்கைக்குச் செல்லும்போது, உறக்கம் வராமல், புரண்டு புரண்டு படுத்தேன்.. எதார்த்தமாக என் நினைவலைகள் சென்ற வாரம் நான் வழிநடத்திய குணமளிக்கும் வழிபாட்டு நிகழ்வுக்கு கடந்து சென்றன. வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனை மக்கள் கூட்டத்திற்கு நடுவில் நிற்க வைத்து, செபித்த பின்னர், அவனது நோய், அந்நேரமே நீங்கிற்று. கூடியிருந்தோருக்கு ஆனந்த அதிர்ச்சி. கை தட்டியதில் அரங்கமே அதிர்ந்தது. மேடைக்கருகே பெண்கள் பேசிக் கொண்டது என் காதில் விழுந்தது. "இந்த தம்பி என்ன வல்லமையோடு செபிச்சிச்சு தெரியுமா? உடனே அந்த குட்டி பையனுக்கு சௌக்கியம் கிடச்சிடுச்சு. இவ்வார்த்தைகள் என் காதில் விழுந்ததும் எனக்குள் மகிழ்ச்சி மிளிர்ந்தது.

"ஏங்க இன்னைக்கி பள்ளிக்கூடத்துக்குப் போகலையா? இன்னும் தூங்கிக்கிட்டிருக்கீங்க. சீக்கிரம் எந்திரிச்சு கிளம்புங்க" என்னும் மனைவியின் அதட்டல் குரல் கேட்டு அதிர்ந்துபோய் படுக்கையிலிருந்து எழுந்தேன். ஐயோ இதுவரை கண்டது கனவுதானா? வல்லமை, ஆற்றல், மகிழ்ச்சி இது எல்லாம் கனவில் மட்டும்தானா? நிஜ வாழ்வில் விரக்தி ஏமாற்றம், பிறரின் ஏளனப் பேச்சு, எனது வலுவின்மை... என்பவையல்லவா விஞ்சி நிற்கின்றன!. "நான் ஒன்னத்துக்கும் லாயக்கில்லை" என்ற தாழ்வு மனப்பான்மையால் என்னையே நிரப்பிக் கொண்டிருந்தேன்.

"என் அருள் உனக்குப் போதும். வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" என்றும் தொடர்ந்து, "நான் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்" என்ற வார்த்தைகள் என் நினைவுக்கு வந்து எனக்கு ஆறுதலும் மகிழ்வையும் தந்தன(2 கொரி 12:9).

வலுவின்மையில் ஆண்டவரின் வல்லமை வெளிப்படும் என்ற நம்பிக்கையோடு, மகிழ்ச்சியாய் இருப்பது சாத்தியம்தானே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

பிறப்பு இறப்பு போல் மனிதனிடம் பிரிக்க முடியாமல இருப்பது துன்பம். கடவுளைப் பற்றிக் கொண்டிருப்பவர்களை விடாது பற்றிப் பிடிப்பது துன்பம்.

இந்த உலகத்தின் தலைவன் மனிதருக்கு துன்பத்தை வழங்கி அவர்கள் மனத்தை தளர்ச்சி அடைய செய்து கடவுளிடம் இருந்து அவர்களை பிரிக்கிறான் (1 யோவா 5:19). நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார். பொல்லார் துன்பம் வந்தவுடன் விழுந்துவிடுவர் (நீமொ 24:16) என்பதைப் போல துன்பத்தின் மூலம் நம்பிக்கை குன்றியோர்களை கடவுளிடமிருந்து பிரித்துவிடுகிறான். ஆனால் அந்தத் துன்பத்தை தாங்கி கடவுளுக்கு சாட்சியாக இருப்பவர்கள் உலகத்தை வெல்கின்றனர். இவ்வாறே நமக்கு முன் இருந்த அனைத்து பணியாளர்களும் துன்பத்தைத் தாங்கி வெற்றி பெற்று எடுத்துக்காட்டாய் வாழ்ந்தனர். துன்பமே அவர்களுக்கு வான்வீட்டின் திறவுகோலாக இருக்கிறது.

துன்பம் இரண்டு வகையில் வருகிறது. 1. உலகத்தின் மீது உள்ள ஆசைகளால் நாமே வருவித்துக் கொள்வது. 2. நமது தகுதியை சோதித்தறியும் பொருட்டும் நமக்கு கற்பிப்பதின் பொருட்டும் வருவது. இந்த உலகத்தை சார்ந்த எண்ணங்களே துன்பத்துக்கு காரணமாக இருக்கிறது. அது ஒரு பொருளாக இருக்கலாம். நபராக இருக்கலாம், பதவியாக இருக்கலாம். துன்பத்துக்கு காரணமான பொருளையோ நபரையோதான் நாம் தொடர்ந்து பிடித்துக் கொண்டிருக்கிறோம். நமது எண்ணம் அதைச் சுற்றி சுற்றியே வருகிறது. ‘‘என்னைவிடத் தம தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் என கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர் (மத் 10:37-39). இந்த உலகத்தில் அனைத்தையும் விட இயேசுவின மீது பற்றுக் கொண்டிருந்தால் எந்த துன்பமும் நம்மை பாதிக்காது.

சில நேரங்களில் நமக்கு வரும் துன்பம் நன்மையை தருகின்றது. உடல் நலக்குறைவு வரும்போது நாம் நோயைப் பற்றிய விழிப்புணர்வைப் பெறுகின்றோம். விபத்துக்களை சந்திக்கும்போது அதிக கவனமுடன் வாகனத்தை இயக்கும் விழிப்புணர்வைப் பெறுகிறோம். அதுபோல சில துன்பங்கள் வழியாக கடவுள் நம்மை தேர்ந்தெடுக்கவும் செய்கிறார். நான் உன்னைப் புடமிட்டேன். ஆனால் வெள்ளியைப் போலல்ல. துன்பம் எனும் உலை வழியாய் உன்னைத் தேர்ந்தெடுத்தேன் என்கிறார் நம் ஆண்டவர் (எசா 48:10). நம்மில் பல பேர் துன்ப உலையில் புடமிடப்படுவதை விரும்புவதில்லை. ஏனெனில் நமக்கு கடவுளிடம் இருந்து ஆசீர்வாதம் மட்டுமே வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் கடவுள் நம்மைச் சோதித்தறிந்து நம்மை தேர்ந்தெடுப்பதுதானே உண்மையான ஆசீர்வாதம். கடவுள் ஒருவரை உருவாக்க, பயன்படுத்த நினைத்தால் அவர்களை புடமிடுவார். துன்பத்திலும் வழி தவறாதவர்களை அவர் பணிக்காக பயன்படுத்துகிறார். ‘‘எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே. அதனால், உம் விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன்’’ (திபா 119:7) என்று சொல்லும் தயாரான மனநிலையை பெறுவோம். மகிழ்ச்சியை நாம் எப்போது பெறுவது? ‘‘வாழ்க்கை இன்பமாய் இருக்கும்போது மகிழச்சியோடிரு; துன்பம் வரும்போது நீ நினைவில் கொள்ள வேண்டியது. அடுத்து என்ன நடக்கும் என்பதை நீ தெரிந்து கொள்ளாவண்ணம் கடவுள். இன்பத்தையும் துன்பத்தையும்

மாறி மாறி வரவிடுகிறார் (சஉ 7:14). கண்டிப்பாக நமது துன்பம் இயேசுவால் மாற்றப்பட்டு மீட்கப்படுவோம். அடுக்கடுக்காய் துன்பம் வந்தாலும் அடுக்கடுக்காய் இன்பமும் வரும். எத்தகைய சூழலிலும் கடவுளுக்கு நன்றி கூறி அவரைப் புகழும் மனநிலையில் இருப்போம் (1 கொரி 10:11).

உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்'' (யோவா 16:3) என்னும் வார்த்தையை உள்வாங்கி கடவுளிடம் இருந்து நம்மை பிரிக்க அலகை நமக்கு தரும் துன்பத்தை கண்டு கலங்காமல் துணிவுடன் இருப்போம். நமது சிலுவையை நாம் சுமந்து அவரை பின்பற்றி சென்று, துன்பத்தை கடவுளை அனுபவிக்கும் அருள் வழியாய் மாற்றுவோம்.

நற்பணி.**ஜஸ்டின்,** பாம்பன்.

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் கால்களில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்"(எபே6:15)

நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகளைப் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். ஒரு நல்ல தொடக்கம் சிறந்த முடிவைத் தரும் என்பார்கள். நற்செய்தி அறிவிப்பது வெறும் கடமைக்காக இல்லாமல் பிறருடைய ஆன்மாவை அழிவிலிருந்து மீட்க நாம் கருவியாகக் கடவுளால் பயன்படுத்தப்பட இருக்கிறோம் என்ற மனநிலையோடு தொடங்க வேண்டும். யாருக்கு அறிவிக்கின்றோமோ அவர்களுக்கு இயேசுவை முழுமையாய் கொடுக்க வேண்டும் என்றால் சிறந்த தயாரிப்பையும் தகுதியையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். உண்மையான நற்செய்திப் பணியாளரிடம் இருக்க வேண்டிய தயார் நிலைகளைப் பற்றித் தியானித்து வருகின்றோம். நற்செய்திப் பணியை இறைவனின அழைப்பாகக்கருதி மட்டுமே செய்ய வேண்டும். அதனைப் பிழைப்புக்கான ஊதியம் ஈட்டும் தொழிலாகச் செய்தல் கூடாது. இன்றைக்கு பல சபைகளில் 10% காணிக்கையை மையப்படுத்தித்தான் நற்செய்தி பணிகள் நடக்கின்றன.

"உங்களுக்கு எச்செலவுமின்றி நற்செய்தியை அறிவிப்பதிலுள்ள மனநிறைவே அக்கைம்மாறு''(1கொரி9:18) நற்செய்தியை அறிவிப்பதில் பொருளை மையப்படுத்தாமல் இயேசுவின் அன்பையும், அவர் தருகின்ற பாவ மன்னிப்பையும், விடுதலையையும் மட்டுமே மையப்படுத்தி அறிவிக்கின்ற நமக்குக் கிடைக்கின்ற மனநிறைவையும் மகிழ்ச்சியையும் யாராலும் எதனாலும் நமக்குத் தர முடியாது. நற்செய்தி அறிவிக்கின்ற ஆயத்த நிலையில் முக்கியமான ஒன்று பொருளாசை இல்லாமல் வாழ்வது ஆகும். இவ்வுலக வாழ்வின் தேவைகளுக்குப் பணமும் பொருளும் தேவைதான். ஆனால், பணத்தின் மீது மிகுதியான ஆசை வைப்பது நற்செய்திப்பணி செய்வதற்குத் தடைக்கல்லாகிவிடும்.

கனடா நாட்டின் நயாகரா நீர்வீழ்ச்சி பற்றி நம்மில் பலர் அறிந்திருப்போம். அந்த நீர்வீழ்ச்சியைப் பார்வையிடுவதற்காக ஒவ்வொரு நாளும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவர். 1848ஆம் ஆண்டு மார்ச் 29 அன்று எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வருவது திடீரென்று நின்று போயிற்று. அனைவரும் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தனர். பின்னர் 29 மணி நேரம் கழித்து மீண்டும் பழைய மாதிரி நீர்வீழ்ச்சியிலிருந்து தண்ணீர் கொட்ட ஆரம்பித்திருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்த பொழுது தான் தெரிந்தது நீர்வீழ்ச்சியில் தண்ணீர் விழும் வழியில் மிகப்பெரிய பனிப்பாறை அடைத்திருந்தது தெரிய வந்தது. அந்த பனிப்பறை கொஞ்சம் கொஞ்சமாக உருகிய பின் தண்ணீர் வருவதற்கு வழி கிடைத்து, முன்பு போல நீர்வீழ்ச்சியில் தண்ணீர் கொட்டி இருக்கிறது. இதுபோல நம்முடைய வாழ்விலும் நற்செய்திப் பணி செய்வதற்கு

பொருள் ஆசை மிகப் பெரிய தடைக்கல்லாக நின்று நம்மை முன்னோக்கி செல்ல விடாமல் தடுத்துவிடும்.

“பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர்” (1திமோ6:20) இந்தப் பொருளாசை யாரையும் விட்டு வைப்பதில்லை. நற்செய்தி அறிவிப்புப் பணியையும் பொருள் தேடுவதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள நம்மைத் தவறான வழிக்கு வழிக்கு இட்டுச் செல்லலாம் .

நம்மில் பொருளாசை இருந்தால் பிறர் அன்பு செயல்களை செய்யவிடாது. தேவையில் இருப்பவர்களை கண்டும் காணாதது இருப்போம். ஒருமுறை ஒரு சகோதரி என்னிடம் வருத்தமும் அழுகையுமாக ஒரு செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். அவர்களுடைய குடும்பத்தில் ஏதாவது நல்ல காரியம் நடக்கப் போவது தெரிந்தால் அவர்களுடைய சகோதரன் குடும்பத்தினர் இவர்களிடம் ஏதாவது வம்பு செய்து பெரிய சண்டையை போட்டுவிட்டு பேசாமல் இருந்து விடுவார்களாம். சகோதரியுடைய வீட்டு விசேஷங்கள் எல்லாம் முடிந்து ஆறு மாதம் ஒரு வருடத்திற்குள் மீண்டும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தானாக வந்து உறவை வளர்த்துக் கொள்வார்களாம். ஏன் அப்படி செய்கிறார்கள் என்று கேட்டதற்கு அந்த சகோதரி சொல்கிறார்கள் என்னோடு நல்ல உறவாக இருந்தால் என் வீட்டில் நடக்கும் காரியங்களுக்கு செய்முறை செய்ய வேண்டுமல்லவா? அதற்காகத்தான். சண்டை போட்டு பேசாமல் இருந்து விட்டால் விசேஷங்களுக்கு வர வேண்டியதில்லை அவர்களுக்கும் இந்த செலவெல்லாம் இல்லை அல்லவா என்று கூறி அழுதார்கள். பொருள் ஆசை மனிதர்களை எப்படி எல்லாம் தீமை செய்வதற்கு தூண்டுகிறது. பொருளாசை உடையவர்கள் விசுவாசத்திலிருந்து வெகு தொலைவிற்கு விலகிப் போய் தீமைகளை தமக்குத் தாமே விளைவித்து கொள்கிறார்கள் (1திமோ6:10).

இன்றைக்கு நடக்கிற கொலை, கொள்ளை, சைபர் கிரைம் என்று சொல்லப்படுகின்ற ஆன்லைன் மிரட்டல்களில் பணம் பறிப்பது போன்ற அத்தனை சாத்தானின் செயல்பாடுகளுக்கும் காரணம் பொருளாசைதான். உண்மையான நற்செய்திப் பணியாளருக்கு பொருளின் மீது ஆசை, பற்று இருக்காது. ‘உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கேயே உங்கள் உள்ளமும் இருக்கும்’(மத்6:21) என்று ஆண்டவர் கூறுகிறார். அழியாத செல்வமாகிய இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு அவரையே சார்ந்து இருக்க கற்றுக் கொண்டோமெனில் நம் உள்ளமும் அவரை நோக்கியே இருக்கும். அதனால்தான் இயேசுவும் நற்செய்தி பணிக்கு சீடர்களை அனுப்பும்போது பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் இடைக்கச்சைகளில் வைத்துக்கொள்ள வேண்டாம் (மத் 10:9) என்று சொல்கிறார். ஏனென்றால் நற்செய்தி அறிவிக்கும் போது அடிக்கடி காசு பணம் இருக்கிறதா என்று இடைக்கச்சையை தொட்டு தொட்டு பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். எனவே தான் எதுவும் இல்லாமல் ஆண்டவரையே சார்ந்து செல்வதற்குச் சீடர்களுக்குக் கற்பித்தார்.

பொருளாசை என்னும் புதைகுழிக்குள் விழுந்துவிட்டால் எப்படி எல்லாம் நற்செய்தி அறிவிப்பை பொருள் தேடப் பயன்படுத்தலாம் என்று அலகை வெகு சாமர்த்தியமாக பக்தி வேஷம் போட்டுக்கொண்டு திட்டம் போட்டுக் கொடுப்பான். நம் ஆவிக்குரிய போராட்டத்தில் அலகையைத்தான் எதிர்த்து நின்று போராடுகிறோம். ஆண்டவர் இயேசுவிடமே பொருளாசையைக் காட்டிச் சோதித்த சாத்தான் நம்மை எல்லாம் ஏமாற்றுவது எளிதல்லவா? எனவே. விழிப்பாய் இருப்போம். செல்வச் செருக்கு தந்தையிடமிருந்து வருவது அல்ல. (1யோவா2:16). தந்தையிடமிருந்து வராத அனைத்தும் சாத்தானிடமிருந்தே வருகிறது என்பதை அறிந்து கொள்வோம்.

பொருளாசை இல்லாத மனநிலையை நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகளில் முக்கியமான ஒன்றாகக் கொள்வோம் அமைதியை அருளும் நற்செய்தியை நமது மன நிறைவுக்காகவும் இறையாட்சி மலர வேண்டும் என்ற விருப்பத்தோடும் செய்ய முயல்வோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

# ஆகஸ்ட் 2024 புதிய பணியாளர்கள் பயிற்சி – குழு 1

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 04.08.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம் |
| 04.08.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம்,காளையார்கோவில் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 01.08.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி J. ரபேக்கா |
| 11.08.24 | புனித செபமாலை அன்னை கோவில், இரோமநாதபுரம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 18.08.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி |
| 18.08.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி A. சந்திரபுஷ்பா |
| 25.08.24 | தூய ஆவியார கோவில இராசசிங்கமங்கலம் | நற்பணி J. மேரி புஷபம<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 25.08.24 | புனித அந்தோணியார் கோவில், கமுதி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி M. லூயிஸ் ஜான்போஸ்கோ<br>நற்பணி T. மைக்கேல் |

# 2024 ஆண்டுத் தியானம் – 2024

| | நாள் | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 16,17 & 18 ஆக. 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. குமார் ராஜா தூத்துக்குடி | நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி I. செபஸ்தியான் |
| 2. | 23,24 & 25 ஆக. 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. கிரேஸிஸ் மைக்கல் இறைஇரக்க தியான இல்லம்,மாங்கனி | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி S. செபாஸ்டின் தார்சிஸ் |
| 3. | 13,14 & 15 செப். 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி M. சேவியர்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 4. | 20,21 & 22 செப். 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. கிரேஸிஸ் மைக்கல் இறைஇரக்க தியான இல்லம்,மாங்கனி | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. சத்தியேந்திரன் |
| 5. | 18,19 & 20 அக். 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி I. புஷ்பராஜ்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 6. | 25,26 & 27 அக். 2023 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி S. இரஜேந்திரன் |
| 7. | 08,09 & 10 நவ. 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. மைக்கேல் மகிழன்<br>Fr. மைக்கேல் மகிழன் | நற்பணி A. பெமிலா ஸ்டீபன்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

# என் ஆயன்

திருவிவிலியத்தின் 73 புத்தகங்களிலும் தனக்கென தனிச்சிறப்பைப் பெற்றிருப்பது திருப்பாடல்கள். இவைகள் கவிதை நடையில் எழுதப்பட்டிருப்பதால் இவற்றை 150 அதிகாரங்கள் என்று கூறாமல் 150 திருப்பாடல்கள் என்றே கூறுகின்றனர். 150 திருப்பாடல்களில் சிலவற்றை தாவீது பாடியிருக்கிறார். சிலவற்றைத் தாவீதின் மகன் சாலமோன் பாடியிருக்கிறார். இன்னும் சிலவற்றைத் தாவீதின் இசைக் கலைஞனாகிய ஆசாப் பாடியிருக்கிறார். மேலும், சிலவற்றை மோசேயும் லேவி குலத்தில் ஒரு கூட்டமாகிய கோராகியரும் பாடியிருக்கிறார்கள். இதில், தாவீது பாடியத் திருப்பாடல்களைப் பாடுகின்ற பொழுது உடலும் உள்ளமும் புத்துயிர் பெறுவதை உணர முடியும்.

கடுகைத் துளைத்து குறுகத்தறித்தது என்று திருக்குறளைக் குறித்து சொல்வார்கள். ஆனால், அணுவைத் துளைத்து அதனுள் அகிலத்தை அடக்கியதுபோல ஆறே வசனங்களில் ஆண்டவரின் அனைத்து மகிமைகளையும் அடைத்து வைத்திருக்கின்ற வரிகளாக திருப்பாடல் 23 காணப்படுகிறது. 150 திருப்பாடல்கள் என்னும் தங்க கிரீடத்தில் பதிக்கப்பட்ட முத்தாகவும், இறை நம்பிக்கையாளர்களின் இதயத்தைக் கொள்ளை கொள்ளும் சொத்தாகவும் இத்திருப்பாடல் அமைந்துள்ளது. இத்திருப்பாடலை வாசிக்க வாசிக்க அருள் பெருகும். யோசிக்க யோசிக்க ஆண்டவரைக் குறித்த அறிவும் வளரும். சிந்திக்க சிந்திக்க ஆண்டவர் வைத்திருக்கின்ற ஆசிர்வாதங்களின் அளவும் விரியும். எத்தனை முறை வாசித்தாலும் ஒவ்வொரு முறையும் புதிதாகவே இருக்கும். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோராலும் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் விரும்பி வாசிக்கக்கூடிய விவிலியப் பகுதியாக இத்திருப்பாடல் விளங்குகிறது.




விருந்து வீடுகளிலும் - விவாக மேடைகளிலும், புதுமனை புகு விழாக்களிலும் - புகழ்ச்சி நேரங்களிலும், ஆபத்து காலங்களிலும், ஆறுதல் நேரங்களிலும் ஆதரவு தரக்கூடிய பாடல்தான் இத்திருப்பாடல். கடவுளைப் பின் தொடர்கிறவர்களைக் குறித்த கரிசனையையும் கருத்தான பராமரிப்பையும் வெளிப்படுத்துகின்ற வரிகளாக இத்திருப்பாடல் காணப்படுகிறது. மனித குலத்தின் மீது கடவுள் காட்டும் அளவற்ற அன்பை ஆயனுக்கும் ஆடுகளுக்கும் உள்ள உறவில் ஒப்பீடு செய்து, ஆயன் தம் மந்தையைக் காப்பது போல ஆண்டவர் தம் மக்களைக் காத்து வருவதை இத்திருப்பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது.

நல்ல ஆயன் தன் ஆடுகளை ஒவ்வொருநாளும் பசுமையான புல்வெளிக்கு அழைத்துச் சென்று அவைகளுக்குத் தேவையான உணவும், நீர்நிலைகளுக்கு நடத்திச் சென்று, தேவையான நீரும் பருகவைத்து, அவைகள் இளைப்பாறுவதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்து, கூடவே இருந்து, கொடிய மிருகங்கள், கொடூர எதிரிகளிடமிருந்து பாதுகாத்து, வழிதவறிச் சென்ற ஆட்டை தேடிக் கண்டுபிடித்து, அவற்றிற்குக் காயம் ஏற்பட்டால் கட்டுப்போட்டு, எண்ணெய்பூசி, குணப்படுத்தி, நலிந்த ஆட்டை தோள்மேல் சுமந்து, ஆட்டுக்குட்டிகளையும் சினையாடுகளையும் கவனமுடன் நடத்தி, மாலையானதும் ஆடுகளைக் கொட்டிலுக்குக் கூட்டி வந்து, பாதுகாப்பாக அடைத்து, திருடர்கள் புகுந்துவிடாமல் இராமுழுவதும் கண்விழித்துக் காத்து, வாழ்வளிப்பது ஒரு நல்ல ஆயனின் கடமையாகும். நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிரையும் கொடுப்பான்.

அதுபோலவே. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஆயரில்லா ஆடுகளைப் போல் மக்கள் அலைவதைக் கண்டு. பரிவு கொண்டு. "ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்" (யோவா 10:10-110) என்றார். "அவரே நம் கடவுள்: நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள்: நாம் அவர் பேணிகாக்கும் ஆடுகள். நாம் அவரது குரலுக்குச் செவி கொடுத்தால் எத்துணை நலம்!" (திபா 95:7).

ஆயனின் குரலை அறிந்து அவரைப் பின்தொடர்கின்ற ஆடுகள் அச்சமின்றி மேய்ந்து. தேவையான நீர் பருகி, அமைதியாக இளைப்பாறி வாழ்வைப் பெறுகின்றன. கூடவே இருந்து பேணி வளர்க்கும் நல்ல ஆயனுக்காக ஆடுகளும் பால். உரோமம். இறைச்சி தந்து தங்களையே பலியாக்குகின்றன. ஆயனுக்காக பலியாகின்ற எளிய ஆடுகளே துயரப் படவேண்டாம். உங்கள் துயரங்களை நல்ல ஆயன் அறிந்திருக்கிறார். முட்புதரில் சிக்கி ஓலமிடும் ஆடு. பாதையறியாது பாலைநிலத்தில் அலைந்து திரியும் ஆடு. தனிமையிலே பரிதவித்து கண்ணீர்விடும் ஆடு. என் அழுகுரல் எவருக்கும் கேட்கவில்லையோ எனக் கதறிக் கதறித் தளர்ந்து போன ஆடு. கால் ஒடிந்து காயப்பட்டு இரத்தம் சொட்டச் சொட்ட துடித்துக்கொண்டிருக்கும் ஆடு. நோயுற்று அல்லல்படும் ஆடு. முதிர்ந்த வயதால் ஒதுக்கப்பட்ட ஆடு இத்தகைய ஆட்டைத்தேடும் நல்ல ஆயனின் குரல் கல்வாரி மலைக் குன்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. முள்ளிலிருந்து விடுவிக்க முள்முடி சூட்டப்பட்டு. காயங்களிலிருந்து விடுவிக்க காயப்பட்டு. கதறிக் கதறித் துடித்து தன் ஆடுகளுக்காக உயிரையே கொடுத்த நல்ல ஆயர். இதுபோல் யார் உண்டு நம்மை அன்பு செய்ய!

"ஆண்டவர் என்னோடு இருப்பதால்
எங்கிருந்தும் அஞ்சிடேன்'.
மத் 7:2

ஆகவே. மனித குல மீட்புக்காக உயிரையே தந்த நம் ஆண்டவராம் இயேசு இயேசு கிறிஸ்துவுக்காக நம்மையே தூய பலியாக அர்பணிக்க கடமைப் பட்டிருக்கிறோம். ஏனெனில், அவர் நம்மை பாதுகாத்து. பராமரித்து. புத்துயிர் அளித்து. குணமளித்து. வெற்றி தந்து. உடன் இருப்பவர் அவரே: அவராலே வாழ்கிறோம். இவராலன்றி வேறு எவராலும் வாழ்வு இல்லை. அனைத்தும் அவரிடமிருந்தே வந்தன: அவராலேயே உண்டாயின: அவருக்காகவே இருக்கின்றன. அவருக்கே என்றென்றும்மாட்சி உரித்தாகுக! (உரோ 11:36).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# ஒரு பணியாளரின் மன்றாட்டு



"நீங்கள் அமைதியாயிருங்கள்: நான் உங்களுக்காக போரிடுவேன்" (விப 14:14) என்றவரே இறைவா! நாங்கள் அமைதியாயிருந்து. உம்மை உணர்ந்து கொள்ளவும் (திபா 46:10) சோதனைக்கு உட்படாதிருக்க உம்மிடம் வேண்டவும் (லூக் 22:40)எங்களை ஆண்டு தியானத்திற்கு அழைத்திருக்கிறீர். அன்றாட காரியங்களில் இருந்து விடுபட்டு நீர் தனிமையில் பாலைவனத்தில் செபித்ததுபோல் (மத் 4:1). நீர் தரும் வெளிப்பாட்டிற்காக அரேபியா சென்று பவுலடியார் செபித்ததுபோல் (கலா 1:17) நாங்களும் விழித்திருந்து. தனித்திருந்து செபித்து. புதுப்படைப்புகளாக மாறிட வேண்டிய வரமருள வேண்டுகிறேன்.

# பகைமையைக் காட்டும் சகோதரமா?
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)



பல வருடங்களாக மலடியாயிருந்த அந்தப் பெண் கணவரின் இறை வேண்டுதலால் கர்ப்பிணியானார். ஆனால் அவருக்குள் ஒரு கலக்கம் பிள்ளையின் அசைவுகள் தாய்க்கு மகிழ்ச்சியான அனுபவம் தருவதற்குப் பதில் குழப்பத்தை ஏற்படுத்தின. குழந்தைகள் இப்படி முட்டி மோதுவதேன்? பதிலை ஆண்டவரிடம் தேடினார். ''உன் கருப்பையில் இரு இனங்கள் உள்ளன; உன் வயிற்றிலிருந்தே ஈரினத்தார் பிரிந்திருப்பர். ஓர் இனம் மற்றதை விட வலிமைமிக்கதாய் இருக்கும். மூத்தவன் இளையனுக்குப் பணிந்திருப்பான்" (தொநூ 26:23). இப்போது இவர்கள் யார் என்று புரிந்திருக்கும். வயிற்றில் இருக்கும் போதே மல்யுத்த சண்டையா? ஏன்?

இரு சகோதரர்கள் காணிக்கையை கடவுளுக்குச் செலுத்த வருகிறார்கள். ஆண்டவர் ஒன்றைக் கனிவுடன் ஏற்றுக் கொண்டு மற்றொன்றைப் புறக்கணிக்கிறார் (தொநூ 4:4.5 ). அங்கே அண்ணன் தம்பியைக் கொல்கிறான். உலகின் முதல் சகோதரக் கொலை . ஏன்?

அந்த அப்பாவுக்கு தனது 12 மகன்களில் அந்த ஒரு மகனை மிகவும் பிடிக்கும். அவனுக்கு மட்டும் மிக அழகான உயர்ந்ததொரு ஆடை வாங்கிக் கொடுத்தார். அவர் சகோதரர்களோடு மந்தை மேய்த்துக் கொண்டிருக்கும் போது அவர்கள் தீச்செயல் செய்வதைக் காண்கிறார் அந்த 17 வயது இளைஞர். அதை தம் தந்தையிடம் போய் தகவல் கொடுக்கிறார். அதோடு கூட இருந்தால் பரவாயில்லை. வயலில் அறுத்த அரிக்கட்டுகளில் தன்னுடையது மட்டும் எழுந்து நிற்க மற்ற சகோதரர்களின் அரிக்கட்டுகள் வணங்கியதாகவும், "கதிரவனும், நிலாவும் பதினொரு விண்மீன்களும் என்னை வணங்கக் கண்டேன்" என்றும் தனது கனவுகளை சொல்லவும் சகோதரர்கள் வெறுப்பின் உச்சிக்கே சென்றனர். இவனைக் கொல்லலாமா? விற்றுக் காசாக்கி விடலாமா? என்கிற அளவுக்கு சென்றனர். ஏன்?

அந்த சகோதரிக்கு 1008 வேலைகள் பரபரவென்று பார்த்துக் கொண்டே தன் சகோதரியை ஓரக்கண்ணால் பார்க்கிறார். அவளோ அமைதியா உட்கார்ந்து அந்த போதகரின் வார்த்தைகளை ஆர்வமாய் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆதங்கம் வருத்தமான வார்த்தைகளாக மாறி அவரிடமே குறை கூறும் அளவிற்குப் போகிறது. ஏன்?

இந்த ஏன்? ஏன்? ஏன்??? என்ற கேள்விக்குறிகள் நமக்குள் பல நேரங்களில் தோன்றி தோன்றி மறையும் விடை காணாமல் பிரமித்து நிற்கும். ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் தானே. ஒரே ரத்தம் அல்லவா? பின் எங்கிருந்து வந்தது இந்தப் பகைமை? இதற்குப் பதில் தான் என்ன?

என் சிற்றறிவுக்கு எட்டிய விதத்தில் தூய ஆவியாரை துணைக்கு அழைத்துக் கொண்டு தந்தைக் கடவுளிடம் சமர்ப்பித்து விட்டு.''இயேசண்ணா எனக்கு நீங்கதான் தாண்ணா" என்று சொல்லிவிட்டு தியானித்தபோது கிடைத்த செய்திதான் இக்கட்டுரை.

விவிலியம் இன்றி விளக்கமா? முடியுமா நம்மால்? நமக்குக கண்ணாடி, டிக்ஸ்னரி, வழிகாட்டி, அறிவுரையாளர் எல்லாமே விவிலியம்தானே. எனவே, சகோதரத்துவத்தின் பகைமை பற்றி தியானித்து அதன் மகிமை எதுவென்று முடிப்போம்.

**பகைமையின் அடித்தளம் எது?:**

முதல் பகையை உலகில் கொண்டு வந்த காயின் ...இருவர் காணிக்கைகளைக் கொண்டு வர ஒருவரின் காணிக்கையைக் கனிவுடனுடன் கண்ணோக்கிய கடவுள், மற்றவனின் காணிக்கையைக் கடுமையாகப் பார்க்கிறார்.

பெற்றோர் முதல் குழந்தைகளை செல்லமாக, வரமாக ஆசை ஆசையாய் போற்றி வளர்ப்பார்கள். அடுத்த குழந்தை பிறந்தாலும் முதல் குழந்தையின் மேல் அன்பு குறையாது எனினும் புதிதாய் பிறந்த குழந்தைக்கு அதிக கவனமும் அதே பாசமும் கொடுத்தாலும் முதல் பிள்ளை 2வது பிள்ளையைப் போட்டியாகத் தான் பார்க்கும். பெற்றோர் தன்னை விட அதிகமாக அவனை (அவளை) நேசிக்கிறார்களோ அதிக நேரத்தை தம்பியிடமே செலவழிக்கிறார்களே என்ற போட்டி மனப்பான்மை சிறுவயதிலேயே தொடங்கி விடுகிறது. எல்லாவற்றிலும் தன்னை விட தம்பியை முன்னிலைப் படுத்துகிறார்களோ என்கிற நிலை பொறாமையாக விரிவடைகிறது.

"5 வயதில் அண்ணன் தம்பி 10 வயதில் பங்காளி" என்பர் நம் முன்னோர். பொறாமை வீங்கி விரிவடைந்து நிரந்தர பகைமையாக மாறிப்போன சகோதரர்கள் பலர் உண்டு. அந்த பலருக்கும் உள்ளார்ந்த அன்பு இதயத்தில் ஒட்டிக் கொண்டு தான் இருக்கும். அது காலப்போக்கில் வெளிவந்து ஒன்றுபடுவோர் உண்டு. ஆனால், காயின் கடவுளால் புறக்கணிக்கபட்ட போது அவன் பகைமையின் உருவாய் மாறிப்போனான். அவனின் போட்டி மனப்பான்மையும், பொறாமையும் வன்மமாக மாறி கொலைபாதகத்தை செய்ய வைத்தது.

"உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென .... நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்" (மத் 5: 23,24) என்றார் நம் இயேசு. நமக்கும் மனத்தாங்கல் இருக்கக் கூடாது. அதைவிட நம்ம மேல வேறு யாருக்கும் மனத்தாங்கல் இருக்கக் கூடாது. உள்ளத்தை ஆய்ந்தறியும் ஆண்டவர் காயினின் கயமையை அறியாதிருந்திருப்பாரோ?

ஏசா வை எடுத்துக் கொண்டால்... "நமக்கு சோறு தாங்க முக்கியம்" என்று சொல்லும் இக்கால இளைஞர்கள் போல செந்நிறக் கஞ்சிக்காக தன் தலைமகன் உரிமையை கொடுத்து விட்டது அவரின் ஒரு வலுவற்ற மனநிலையை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. உணவிற்காக யாராவது உரிமையை விட்டுத்தருவார்களா? அந்த நேரத் தேவை, அவசர முடிவு சகோதரப் பகைமைக்கு வித்திட்டது. பெருந்தீனி விரும்பல் திருச்சபையில் ஒருபாவமாகவே கருதப்படுகிறது.

யாக்கோபு சகோதரனின் பலகீனம் அறிந்து அடிக்கிறார். உணவிற்காக உரிமையைப் பறித்த சந்தர்ப்பவாதியாய் அதிக சாமர்த்தியசாலியாய் செயல்படுகிறார். உடன்பிறந்தோரை ஏமாற்றுதல் பகைமையை வளர்க்கும் அல்லவா?

அவர்களின் பகைமையை நீர் ஊற்றி வளர்த்தார் அவர்களின் தாய் ரபேக்கா. தாயின் பாரபட்சம்... மூத்தவனுக்கு கிடைக்க வேண்டிய தந்தையின் தலைமகனுக்குரிய ஆசீர் இளையனுக்குக் கடத்தப்பட சகோதரப்பகைமை வலுப்பெறுகிறது. சில பெற்றோர் இன்றளவும் பாரபட்சமாய் நடந்து பகைமைக்குக் காரணமாகின்றனர்.

இரட்டைப் பிள்ளைகளில் பலரும் இருவேறு பண்பு நலன்களோடு இருப்பதற்கு மரபணு ஒரு காரணம் என்கின்றனர் ஆராய்ச்சியாளாகள். சகோதர சண்டைக்கும் பகைமைக்கும் இதுவும் ஒரு காரணமாகலாம் அல்லவா?

"எவரும் தவறிழைத்து தம் சகோதரரை வஞ்சிக்கக் கூடாது"(1 தெச 4:6) என்கிறார் தூய பவுல். யோசேப்பின் வாழ்வில் அவருக்கு தம் சகோதரர்களால் நடந்த தொடர் துன்பங்களுக்கு காரணம் போட்டி மனப்பான்மையும், பொறாமை உணர்வுமே. நம் தம்பி தானே நம் இரத்தம் அல்லவா? என்று நினைத்துப் பார்க்காமால் இறுகிய

மனங்களாக மாறிப்போயினர் யோசேப்பின் சகோதரர்கள். இருப்பதிலிலேயே சிறுவன் இவன் மட்டும் என்ன உயர்வு? சிறப்பு? என்கிற சுருங்கிய மனது. பொறாமைத் தீ. கொலைவெறியாக உருப்பெறுகிறது. அதிலும் பொருளாசை வந்து எட்டிப் பார்க்க இவனை செல்லக்காசாக கொல்வதில் என்ன இருக்கிறது? என்று உடன்பிறந்த சகோதரனை விற்கும் இழிவான நிலைக்கு அவர்களை இட்டுச் சென்றது.

"கொலை செய்யாதே" என்று துவங்கும் இயேசுவின் வார்த்தைகள் "தம் சகோதர சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனை தீர்ப்புக்கு ஆளாவார்.... "முட்டாளே",' "அறிவிலியே" என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார்' என்று கடுமையாக எச்சரிக்கின்றது.

'சகோதர சகோதரிகளை வெறுப்போர் கொலையாளிகள்" ( 1 யோவா 3:15) என்கிறார் இயேசுவின் அன்பு சீடர். யூபிலி ஆண்டில் சகோதரர்களுக்கு காட்ட வேண்டிய அன்பையும் கரிசனையையும் பலவார்த்தைகளில் பதிவிடுகிறது வேதியர் நூல்.

மார்த்தா - மரியா... இயேசுவின்பாதத்தில் தங்கை அமர்ந்திருக்க அக்கா வேலை செய்து கொண்டிருக்கிறார். ஒன்று அவரும் வந்து இயேசு பாதம் அமர்ந்து அவரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு இருந்திருக்கலாம். அல்லது தன் தங்கையிடம் உதவி கேட்டிருக்கலாம். இங்கே ஒரு ஆன்மிகப் பொறாமை எட்டிப் பார்க்கிறது. நான் மட்டும் என்ன வீட்டு வேலை பார்ப்பது? என்ற தாழ்வு மனப்பான்மை தலைமேல் வந்து உட்கார்ந்து கொள்கிறது மார்த்தாவுக்கு. தாழ்வு மனநிலை வாழ்வு தராது.

பணியாளர்களின் கூடுகையிலும் யாரவது ஒரு சிலருக்கு இந்த மனப்பாங்கு தலைதூக்கும். நான் திருவழிப்பாட்டுக் குழுவிலோ. ஜெபக்குழுவிலோ. பாடகற்குழுவிலோ இருந்திருக்கலாமே? இப்படி சுத்தப்படுத்தும் குழுவினில் இருக்கிறோமே என்று தோன்றலாம். ஒன்று தெரிந்து கொள்வோம் நாம் பாத்திரங்கள் விளக்கும் போது நம் பக்கத்தில் இயேசு கூடவே இருப்பார். பெஞ்சுகளை நாற்காலிகளை சரி செய்து கொண்டிருக்கும் போது அதை லேசாக்கி தருபவர் யார்? நம் தெய்வம் தான். நடுவில் நின்று நம்முடன் தூக்கிக் கொண்டிருப்பார்.

**சகோதரத்துவத்தின் மகிமை:**

கோபங்கள். மன வருத்தங்கள். சண்டைகள். பிரச்சனைகள் இல்லாத வீடுகள் தான் ஏது? ஒரு சிறு காரணத்திற்காக பல வருடங்கள் பிரிந்திருக்கும் குடும்பங்கள் உண்டு. குடும்ப சொத்தை பங்கிடுவதில் நீதிமன்றம் வரை போய் வன்ம நிலையில் வாழும் சகோதரர்கள் உண்டு. காலப்போக்கில் தம் வாழ்வை சற்றே திரும்பிப் பார்த்து தியானிக்கின்ற போது. மனம் பக்குவப்படும். இதற்கா சண்டை போட்டோம் இதற்கா இத்தனை நாட்கள். இத்தனை மாதங்கள். இத்தனை வருடங்கள் பிரிந்திருந்தோம் என்ற மனநிலை வரும் போது மனம் அந்த உறவுகளுக்காக ஏங்கி நிற்கும். உறவுகளை இணைக்கும் சந்தர்ப்பத்துக்காய் காத்திருக்கும். இறைவனிடம் உருகி உருகி வேண்டி நிற்கும்.

ஏசா - யாக்கோபுவின் வாழ்விலும். யோசேப்பு - அவரின் சகோதரர்களின் வாழ்விலும் அதுதான் நடந்தது. மன்னிப்பை ஒரு அரசனிடம் பணியாள் போல் தாழ்ந்து கேட்ட யாக்கோபு இஸ்ராயேலாக (தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக. கடவுளின் தனிப்பட்ட உரிமை சொத்தாக) உயர்ந்ததை நாம் காணலாம்.

யோசேப்பின் வாழ்விலும் அவனின் சகோதரர்கள் "நம் சகோதரனுக்கு இழைத்த தீங்கினால் தான் நாம் இத்துனை துன்பத்திற்கு ஆளாகிறோம்" என்று மனம் மாறி மனம்வருந்தினர். கலங்கினர். சகோதரர்கள் ஒன்று சேர்ந்த அந்த நிகழ்வினில் யோசேப்பு கூக்குரலிட்டு அழுதார் என்று படிக்கும் போது நம் கண்களும் கசியும். மன்னிப்பை மனதார வழங்கிய யோசேப்பு, பாவம் செய்யாத யோசேப்பு அவரே அழுதார் என்றால் சகோதரர்களின் அழுகையை சொல்லவா வேண்டும்.

அந்த சகோதரர்கள் இறை ஆசீர் பெற்றவர்களாய் சிறப்புற வாழ்ந்தார்கள் என்பது வரலாறு. மன்னிப்பு என்கிற மகத்தவ மாண்பு மரத்துப்போன மனங்களை மிருதுவாக்கி விடுகிறது. மன்னிப்பு கேட்பவர் மனிதர் என்றால் மன்னிப்பு அளிப்பவர்கள் மாமனிதர்கள் என்று பெரியவர்கள் கூறுவார்கள். கடவுள் விரும்புகிற அன்பு வாழ்வு அனைவருடனும் சமாதானமே.

அனைவருக்கும் தந்தையாய் நம் ஆண்டவர் இருக்கிறார். நம் இயேசுவும்(நம்மை) மக்கள் அனைவரையும் சகோதர சகோதரிகளாகத்தான் கண்டார். நம் அனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்பதே அவரின் பேராவலாகவும் கடவுளின் திருவுளமாகவும் இருந்தது. அதை நிறைவேற்றும் பணி நமது கையிலும் கொடுக்கப்பட்டுள்ளது. நமது சகோதரத்துவம் எவ்வாறு உள்ளது என்று ஒரு சுய ஆய்வு செய்து பார்ப்போம்.

"சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று. எத்துணை இனியது! அது ஆரோனின் தலையினிலே ஊற்றப்பெற்ற நறுமணத் தைலம் அவருடைய தாடியினின்று வழிந்தோடி அவர்தம் அங்கியின் விளிம்பை நனைப்பதற்கு ஒப்பாகும். அது எர்மோனின் மலைப்பனி சீயோனின் மலைகள் மேல் இறங்குவதற்கு ஒப்பாகும்; ஏனெனில் அங்கிருந்தே என்றுமுள வாழ்வென்னும் ஆசிதனை ஆண்டவர் பொழிந்தருள்வார்" (திப.133) ஆமென். அல்லேலுயா.

நற்பணி **ஜெஸி. P.**

## ஆகஸ்ட் 2024 வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 04 | கமுதி<br>9443210772 | செயலர்<br>9787967272 |
| 2. | 04 | இராம்நகர்<br>9442959569 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 3. | 04 | செக்காலை<br>9150579311 | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>9655264448 |
| 4. | 04 | C.K. மங்கலம்<br>9626303365 | Sr. ஜோஸ்பின் பச்சை மேரி<br>7708282117 |
| 5. | 11 | மகிண்டிமிக்கேல்பட்டணம்<br>9524495693 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 6. | 11 | செஞ்சை<br>9442758641 | செயலர்<br>9787967272 |
| 7. | 11 | பரமக்குடி<br>94435036294 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 8. | 11 | காளையார்கோவில்<br>9944386477 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 9. | 18 | சாலைகிராமம்<br>8526754557 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 10. | 25 | இராமநாதபுரம்<br>9456037889 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>82443509152 |
| 11. | 25 | சிவகங்கை<br>9943165532 | செயலர்<br>9787967272 |
| 12. | 25 | முத்துப்பேட்டை<br>9940745169 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 04.08.23 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 04.08.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி P. சகாயராணி |
| 10.08.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. ஜுார்துமேரி |
| 11.08.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>நற்பணி A. சகாயதமிழ்செல்வி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 11.08.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா<br>நற்பணி S. வில்லியம் |
| 11.08.24 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர்<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ் |
| 18.08.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. ஜோஸ்பின் பச்சை ஜோதி<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி S. சேசுராஜா |
| 18.08.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 25.08.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி A. ஜான்சி மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
**-எல்லாரோ**

அன்பு செய்ய வேண்டிய ஆயிரம் பேரை,
அன்பு செய்ய நேரம் கிடைக்காதபோது,
நம்மை வெறுக்கும் ஒரு சிலரை,
வெறுக்க மட்டும் நேரம் எப்படிக் கிடைக்கிறது?

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

கடவுள் நமக்குக் கொடுத்த கட்டளைப்படி, அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்தவேண்டும். இதுவே அவரது கட்டளை. 1யோவான் 3:23

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | முழு இரவு செபம் | மகிண்டி மிக்கேல்பட்டணம் |
| 03 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 04 | வட்டாரத் தியானக் கூட்டம் | கமுதி, செக்காலை, இராம்நகர், C.K. மங்கலம் |
| 04. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | அருள்சான்று நிலையம், பரமக்குடி காளையார்கோவில், |
| 04. | தொடர் களப்பணி | A.R. மங்கலம் பங்கு |
| 06. | முழு இரவுச் செபம் | மூக்கையூர் |
| 07 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல், அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 10 | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | தங்கச்சிமடம் |
| 11 | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | இராமநாதபுரம், சிவகங்கை, ஓரியூர் |
| 11. | வட்டாரத் தியானக் கூட்டம் | மகிண்டிமிக்கேல்பட்டணம், செஞ்சை பரமக்குடி, காளையர்கோவில் |
| 11. | தொடர் களப்பணி | மேல முந்தல், சாயல்குடி |
| 16,17 & 18 | ஆண்டுத் தியானம் -II | அமலஅன்னை அமைதியகம், காயாவயல் |
| 18. | வட்டாரத் தியானக் கூட்டம் | சாலைகிராமம் |
| 18. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | அமல அன்னை அமைதியகம், காயாவயல், புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்டி, |
| 21. | நற்பணி விக்டோரியா இல்ல உறுதிப்படுத்தும் விழா | ஓ.சிறுவயல் |
| 23,24 & 25 | ஆண்டுத் தியானம் - III | அமலஅன்னை அமைதியகம், காயாவயல் |
| 25. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | இராஜசிங்கமங்கலம், கமுதி |
| 25. | தொடர் களப்பணி | அஞ்சுக்கோட்டை, இருதயபுரம் பங்குகள் |
| 25. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமநாதபுரம், முத்துப்பேட்டை, சிவகங்கை |
| 26. | நற்பணி சத்தியேந்திரன்- நற்பணி ஜான்சிராணி இல்ல முதல் இறைஉணவு ஏற்புவிழா | இராம்நகர். |

# பகைமையை வெல்வோம்?

இயேசு மண்ணுலகிற்கு வந்தது வெறும் உலகரீதியான விடுதலையை மட்டுமல்ல ஆன்மீக விடுதலையையும் அளிக்கவந்தார். அவர் அக ஆற்றலால் நிரம்பியிருந்தால் இவ்விடுதலையை வழங்க முடிந்தது. இதை அவரது வாழ்க்கையில் பலமுறை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒருநாள் திடீரென கடலில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது. படகிற்கு மேல் அலைகள் எழுந்தன. ஆனால் இயேசு தூங்கிக் கொண்டிருந்தார். ஆண்டவரே காப்பாற்றும் சாகப்போகிறோம் என்று சீடர்கள் கூக்குரலிட்டனர். இயேசு காற்றையும் கடலையும் கடிந்துகொண்டார். கடல் அமைதியானது இயற்கையை அடக்கும் ஆற்றல் உள்ளேயிருந்து அவருக்கு வந்தது(மாற்கு 4:29).

கெத்சமனித் தோட்டத்தில் தன்னைக் கைது செய்ய வந்தவர்கள் முன் சென்று இயேசு "யாரைத் தேடுகிறீர்கள்" என்று கேட்டார். அவர்கள் மறுமொழியாக நாசரேத்து இயேசுவைத் தேடுகிறோம்" என்றார்கள். இயேசு "நான்தான்" என்று கூறியதும் அனைவரும் தரையில் விழுந்தார்கள் (யோவா 18:5,6). அத்தனை வலிமை அவரது வார்த்தைகளுககு இருந்தது. அதுவே அவரின் ஆன்மீக ஆற்றல், அக ஆற்றல்.

ஆபிரகாம் லிங்கனை படைத்தலைவன் டாண்டன் என்பவர் அவமானப்படுத்தினார். அமெரிக்காவின் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லிங்கன். டாண்டனை நாட்டின் பாதுகாப்புப் படையின் செயலராக்கினார். லிங்கனின் பல நண்பர்கள் இச்செயலைக் கண்டித்தார்கள்; எதிர்தார்கள். உங்கள் எதிரிக்கு உயர்ந்த பதவி அளித்திருப்பதாக குற்றச்சாட்டினர். இதைக் கேட்ட லிங்கன் கூறினார். நானும் அதுவே செய்துள்ளேன். எனது ஒரு எதிரியை மேற்கொண்டுவிட்டேன்.

இயேசு தனது பகைவர்களை மேற்கொண்டது அவரது அக ஆற்றலின் வெளிப்பாடு. அவர் யாரையும் எந்த குற்றத்திற்காகவும் தண்டிக்கவில்லை. அவர் தண்டிக்க வந்தவரும் இல்லை. வாழ்வளிக்க வந்தவர். பகைவர்களை அழித்தன்று மாறாக நண்பர்களாக்கி அவர்களை மேற்கொள்கிறார். நாமும் அவருடைய சீடர்கள் என்ற நிலையில் நமது ஆன்ம ஆற்றலால் பகைமையை வெல்லுவோம்.

நற்பணி **V.செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை பங்கு.

## அம்புரோஸ் அறநெறி அமைப்பு

அம்புரோஸ் அறநெறி அமைப்பிற்காக ஆகஸட் மற்றும் செம்மட்பர் மாத வட்டாரக் கூட்டங்களில் **இரகசிய காணிக்கை** எடுக்கப்படும், வட்டார கணகாணிப்பாளர்கள் இதைக் கருத்திற்கொண்டு ஆவண செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்**
www.arulchandrunilayam.org




நீங்கள் எப்போதாவது ஒரு மன அழுத்தத்தை அனுபவித்துஇ யாராவது உங்கள் பக்கத்தில் உட்கார்ந்து எல்லாம் சரியாகிவிடும் என்று உங்களுக்குச் சொல்ல விரும்பினீர்களா? நேர்மறையான உறுதிமொழி உறுவாக்கும் பயிற்சி பற்றி இந்த மாதம் பார்ப்போம்.

உறுதிமொழிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள, நமது சிந்தனை, உணர்வுகள் மற்றும் மனநலம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை நீங்கள் பார்க்க வேண்டும். உறவு கவலைக்கான உறுதிமொழிகள் நேர்மறையான அறிக்கைகளாக செயல்படுகின்றன. அவை நாம் எப்படி நினைக்கிறோம் என்பதை மாற்றவும், நம்பிக்கையான கண்ணோட்டத்தை ஊக்குவிக்கவும் மீண்டும் மீண்டும் சொல்கிறோம். அதனால்தான், இந்த உறுதிமொழிகளைத் தொடர்ந்து வலுப்படுத்துவது, ஆர்வமுள்ள எண்ணங்களுக்குச் சவால் விடலாம் மற்றும் மாற்றியமைக்கும் மற்றும் மேம்படுத்தும் செய்திகளுடன்.

**கவலை மற்றும் மனச்சோர்வுக்கான 10 நேர்மறையான உறுதிமொழிகள்**

நீங்கள் தொடங்குவதற்கு, பதட்டத்தைக் கட்டுப்படுத்த உதவும் உறுதிமொழிகளின் சில எடுத்துக்காட்டுகள் இங்கே உள்ளன:

1. **'நான் அமைதியாகவும், மையமாகவும், என்னுடன் அமைதியாகவும் இருக்கிறேன்.'**

உள் அமைதி மற்றும் மையத்தன்மையை உறுதிப்படுத்துவது அமைதி மற்றும் உணர்ச்சி சமநிலையின் உணர்வை ஊக்குவிக்கிறது, கவலை மற்றும் மனச்சோர்வுக்கு எதிராக பின்னடைவை வளர்க்கிறது. இந்த உறுதிமொழியை நீங்கள் பயன்படுத்தலாம்: **வேலையில்:** மன அழுத்தம் நிறைந்த பணி சந்திப்பின் போது இந்த உறுதிமொழியை திரும்பத் திரும்பச் சொல்வது உள் அமைதியை மேம்படுத்துகிறது. அமைதியையும் கவனத்தையும் பராமரிக்க உதவுகிறது.

**தியானத்தின் போது:** இந்த உறுதிமொழியை காலை தியானத்தில் இணைத்துக்கொள்வது அன்றைய தினத்திற்கு நேர்மறையான தொனியை அமைத்து அமைதியை வளர்க்கிறது. **படுக்கைக்கு முன்:** இந்த உறுதிமொழி அமைதியான மனநிலையை ஊக்குவிக்கிறது, தளர்வு மற்றும் நிம்மதியான இரவு தூக்கத்திற்கு உதவுகிறது.

2. **'எனக்கு என்ன வந்தாலும் கையாள என் திறனை நான் நம்புகிறேன்.'**

இந்த உறுதிமொழி ஒரு நேர்மறையான மனநிலையை மேம்படுத்துகிறது. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதில் தன்னம்பிக்கை மற்றும் நம்பிக்கையை வலுப்படுத்துகிறது மற்றும் கவலை மற்றும் மனச்சோர்வின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுகிறது. இந்த உறுதிமொழியை நீங்கள் பயன்படுத்தலாம்:

**காலைப் பயணம் :** காலைப் பயணத்தின் போது இந்த உறுதிமொழியைப் படிப்பது தன்னம்பிக்கையைத் தூண்டுகிறது மற்றும் அன்றைய சவால்களைச் சமாளிக்க மனதைத் தயார்படுத்துகிறது.

**மதிய மன அழுத்தம்:** ஒரு வேலை நாளுக்கு மத்தியில், இந்த உறுதிமொழியை மீண்டும் மீண்டும் கூறுவது தன்னம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. அழுத்தங்களின் தாக்கத்தை குறைக்கிறது.

**கடினமான உரையாடலுக்கு முன்பு :** சவாலான உரையாடலில் ஈடுபடும் முன் இந்த உறுதிமொழியைச் சொல்வது, கடினமான சூழ்நிலைகளில் வழிசெலுத்துவதற்கான ஒருவரின் திறனைப் பற்றிய நம்பிக்கையை வலுப்படுத்துகிறது.

**3. 'நான் எல்லா கவலைகளையும் விடுவித்துத் தற்போதைய தருணத்தைத் தழுவுகிறேன்.'**

கவலைகளை விடுவித்து, தற்போதைய தருணத்தைத் தழுவிக்கொள்வது, கவலையைத் தூண்டும் எண்ணங்களிலிருந்து கவனம் செலுத்துவதைத் திசைதிருப்புகிறது. நினைவாற்றல் மற்றும் மன அமைதியை ஊக்குவிக்கிறது.

**தினசரி பயணம்:** பயணத்தின் போது இந்த உறுதிமொழியை கூறுவது தினசரி கவலைகளிலிருந்து மனதை திசைதிருப்புகிறது, கவனத்துடன் மற்றும் மன அழுத்தமில்லாத பயணத்தை ஊக்குவிக்கிறது.

**மதிய உணவு இடைவேளை :** மதிய உணவின் போது இந்த உறுதிமொழியைச் சொல்ல சிறிது நேரம் ஒதுக்குவது, மனத் தெளிவை ஊக்குவிக்கும், வேலை தொடர்பான கவலைகளிலிருந்து விடுபட ஊக்குவிக்கிறது.

**மாலைப் பிரதிபலிப்பு:** இந்த உறுதிமொழியை ஒரு மாலைப் பொழுதில் சேர்த்துக்கொள்வது, திரண்ட கவலைகளை விடுவித்து, உறங்குவதற்கு முன் மிகவும் நிதானமாகவும் தற்போதைய நிலையை அடையவும் உதவுகிறது.

**4. 'தற்போது, நான் பாதுகாப்பாகவும் பாதுகாப்பாகவும், அடித்தளமாகவும் இருக்கிறேன்.'**

தற்போதைய தருணத்தில் தன்னை நங்கூரமிட்டுக்கொள்வது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு உணர்வுகளை வலுப்படுத்துகிறது, கவலை மற்றும் மனச்சோர்வின் ஸ்திரமின்மை விளைவுகளை எதிர்க்கிறது.

**ஒரு சந்திப்பிற்கு முன் :** சவாலான சந்திப்பிற்கு முன் இந்த உறுதிமொழி பாதுகாப்பு உணர்வைத் தூண்டுகிறது மற்றும் ஒருவரின் திறன்களில் நம்பிக்கையை வளர்க்கிறது.

**இயற்கையில்:** இயற்கை நடைப்பயணத்தின் போது இந்த உறுதிமொழியை வாசிப்பது பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுடனான தொடர்பின் உணர்வுகளை வலுப்படுத்துகிறது.

**வொர்க்அவுட்டின் போது :** இந்த உறுதிமொழியை ஒரு வொர்க்அவுட் திட்டத்தில் இணைப்பது, மன மற்றும் உடல் சமநிலையை மேம்படுத்தும், அடிப்படை உணர்வை மேம்படுத்துகிறது.

**5. 'ஒவ்வொரு சூழ்நிலையிலும் கவலையை விட, நான் அமைதியைத் தேர்ந்தெடுக்கிறேன்.'**

எந்தவொரு சூழ்நிலையிலும் பதட்டத்தை விட அமைதியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், இந்த உறுதிமொழி ஒருவரின் உணர்ச்சிபூர்வமான பதிலைக் கட்டுப்படுத்தும் திறனை வலுப்படுத்துகிறது. மேலும் நேர்மறையான கண்ணோட்டத்தை ஊக்குவிக்கிறது.

**போக்குவரத்து நெரிசல் :** அதிக ட்ராஃபிக்கில் இந்த உறுதிமொழியை திரும்பத் திரும்பச் சொல்வது விரக்தியிலிருந்து உள் அமைதி நிலையைத் தேர்ந்தெடுப்பதற்கு கவனத்தை மாற்ற உதவுகிறது.

**வரிசையில் காத்திருக்கிறது:** வரிசையில் காத்திருக்கும் போது இந்த உறுதிமொழியைச் சொல்வது, தாமதங்களுக்கு அமைதியான பதிலை ஊக்குவிக்கிறது, கவலையைக் குறைக்கிறது.

**காலக்கெடுவுக்கு முன்:** காலக்கெடுவால் தூண்டப்பட்ட பணிக்கு முன் இந்த உறுதிமொழியை கூறுவது அமைதியான மனநிலையை ஊக்குவிக்கிறது, கவனம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது.

**அசைப்போட அரை நிமிடம் :**

நேர்மறையான உறுதிமொழி. நேர்மறையான வாழ்க்கை முறைக்கு வழி வகுக்கிறது.

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுப்படுத்துநர், பரமக்குடி.

# புனித மாக்சிமிலியான் கோல்பே



தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட

சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா 15:13).

ஜீலியஸ் மற்றும் மரிய கோல்பே ஆகியோரின் அருந்தவப் புதல்வராக போலந்து நாட்டில் 1894 சனவரி 8 அன்று பிறந்தவர் ரெய்மன்ட் என்ற இயற்பெயருடைய மாக்சிமிலியான் கோல்பே. சிறுவயது முதலே கீழ்ப்படிதல் எனும் நற்பண்பினை வளர்த்துக் கொண்ட மாக்சிமிலியான் அன்னை மரியா மீது அளவற்ற பற்று கொண்டிருந்தார்.

தனது வீட்டில் உள்ள அலமாரிக்குப் பின்னால் அன்னை மரியாவின் படம் இருந்தது. அதன் முன் மண்டியிட்டு எப்போதும் செபிக்கும் வழக்கம் உடையவராக விளங்கினார். அவ்வாறு ஒரு முறை செபித்துக் கொண்டிருந்தபோது அன்னை கன்னி மரியா மாக்சிமிலியானுக்குக் காட்சி கொடுத்தார். அன்னை தம் கைகளில் இரண்டு கிரீடங்களை வைத்திருந்தார். ஒன்று வெள்ளை நிறம் மற்றொன்று சிவப்பு நிறம்.

அன்னை மரியா மாக்ஸிமில்லியானை அன்புடன் நோக்கி இவ்விரண்டு கிரீடங்களில் உமக்கு எது வேண்டும்?. வெள்ளை,நீ எப்போதும் தூய்மையில் நிலைத்திருப்பாய் என்பதை குறிக்கிறது. சிவப்பு,நீ மறைசாட்சியாக இறப்பாய் என்பதை குறிக்கிறது என்றார். மாக்சிமிலியான் எவ்வித தயக்கமும் இல்லாமல், அன்னையே இரண்டையுமே எனக்கு கொடுங்கள் என்று கூறினார். அதன் பிறகு இன்னும் அதிகமாக கீழ்ப்படிதலுடனும், தாழ்ச்சியுடனும் வாழ ஆரம்பித்தார் மாக்சிமிலியான்.

மார்க்சிமிலியான் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து தனது 18 வது வயதில் முதல் வார்த்தைப்பாடு எடுத்தார். உரோமையில் மேற்படிப்பில் இருந்தபோது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டு சீல் வைத்த காரணத்தினால் வெட்ட வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். லூர்து மாதா திருத்தல புனித நீரை விரலில் தடவி அற்புதமாய் குணமடைந்தார்.

1939 செப்டம்பர் மாதத்தில் ஹிட்லரின் படைகள் போலந்தை தாக்கியது. ஆயிரக்கணக்கானோர் பல்வகை துன்பங்களுக்கு உள்ளானர். சிறையில் அடைக்கப்பட்ட பலர் வன்கொடுமைகளுக்கு ஆளானார்கள். இவ்வேளையில் சிறையில் அடைக்கபட்டிருந்த மாக்சிமிலியான் மரண தண்டனை வழங்கப்பட்ட குடும்பத் தலைவருக்காக தண்டனையை தான் எற்கத் தயார் என்று கூறி உயிர் நீத்தார். திருத்தந்தை ஆறாம் பவுல் 1971 அக்டோபர் 17 அன்று அருளாளராக உயர்த்தினார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1982 அக்டோபர் 10 அன்று புனிதராக உயர்த்தினார்.

பிறரின் துக்கத்தை போக்க தன்னுயிர் தந்த இவரின் தியாகத்தை போற்றி நமது வாழ்வாக்குவோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## என்னை மன்னியும்

- நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன் என்ற வாக்குறுதியை மறந்து அவரிடம் கேட்க நம்பிக்கையின்றி வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (தொநூ 14:14)
- ஆண்டவரே உம்மைக் காக்கின்றார். அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார். அவரே உனக்கு நிழல் ஆவார். என்பதை மறந்து ஆண்டவரின் பாதுகாப்பை நம்பாமல் வாழ்ந்த தருணங்களுக்காக மனம் வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (திபா 121:5)
- உன் மனச்சான்றை உறுதியோடு பின்பாற்று முன்பின் முரண்படாமல் பேசு என்பதற்கு மாறாக சொல்லிலும் செயலிலும் முரண்பட்டு வாழ்ந்ததை எண்ணி வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (சீராக் 5:10)
- நாவைக் காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்கிறார், நாவைக் காவாதவன் கெட்டழிவான் என்பதை மறந்து பயனற்றதை பேசி வாழ்ந்ததை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (நீமொ 13:3)

நற்பணி S.P. **சவரிமுத்து**. இராம்நகர்

## செப வீரர்களுக்கு

இம்மாத செபக் கருத்து

- அரசியல் மற்றும் நாட்டுத் தலைவர்கள் பொது நலனையும், மக்களின் மேம்பாட்டையும் முன்னிறுத்தி பாகுபாடின்றி ஆட்சி செய்ய.
- அரசியல் தலைவர்கள் சாதி, மத, மொழி, இன அடையாளங்களால் மக்களை பிளவு படுத்தாமல் ஒன்றுமைப்படுத்த.
- சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்தியாவில் சனநாயக மற்றும் மதச்சார்பற்ற மரபுகளும் அமைப்புகளும் காக்கப்பட.
- யூபிலி ஆண்டுத் தயாரிப்பு நிகழ்வுகள் திருஅவையில் நம்பிக்கை எழுச்சிக்கு இட்டுச் செல்ல.
- நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்கவும், விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்படவும்.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- வீட்டிலுள்ள முதியோர்களை குறிப்பாக பெற்றோர்களை மாண்புடனும், கரிசனையுடனும் நடத்தி அவர்கள் நிறைவுடன் வாழ உதவுதல்.



















படங்களைக் கொண்டு இறைவாக்கியத்தை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **சபைஉரையாளர் 1-3 அதிகாரங்களுக்குள்**





ஆண்டுத் தியானம் - அருள்சான்று நிலையம்





அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை



அமைதியகம்



அருள்சான்று நிலையம்



**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development
Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.)
Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com